# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,897—1970 මාර්තු 13 වැනි සිකුරාදා—1970.3.13

14,897 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 239 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 250 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 246 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 246 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


### பதவிகள் — வெற்றிடம்

#### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

---

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இந்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.— தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்கா.*

---

No. AA 13/X2214/70

## இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

### (குடியியற்) பொறியியலாளர் பதவிகள்

இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியில் (குடியியற்) பொறியியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்:

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் 31.3.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 3.4.1970.

**குறிப்பு :**

(i) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல்மூலம் அனுப்புமாறு வேண்டுவோர், தம் சொந்த முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமானதும், 9″ × 4″ அளவிற்குறையாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்போர் தாம் அரசாங்க சேவையிலுள்ளவரா, அல்லாதவரா என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டது, அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாடுகளிலுள்ள அபேட்சகர்கள், அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை வெளிநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட காலவெல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக்கிட்டவுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்கும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்படும் இலங்கை உத்தியோகத்தர்கள், சேவையாற்றற்குத் தகுதியான உடனலமுடையவர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக, மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அந்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றிச் சம்பளத்திற்குரித்துள்ளவையுமாகும். நியமிக்கப்படுபவர்கள் மூன்றுண்டுகாலப் பயிற்சி நெறிக்குள்ளாகுமாறு வேண்டப்படுவர். அப்பயிற்சிக் காலத்தில் அவர்கள் தகுதிகாண் நிலையில் வைத்திருக்கப்படுவர். அவர்கள் விதவைகள் அனாதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள், நியமனம் பெறுதற்குமுன், உடற்றகுதியுள்ளவர்களென்பதைக் கணிக்குமுகமாக, நியம கண்பரீட்சை உட்பட, ஒரு மருத்துவச் சோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர். மேலும் அவர்கள், மூன்றுண்டுப் பயிற்சிநெறியை உண்மையுடனும் ஊக்கத்துடனும் பயில்வர்களென்பதற்கும், வெற்றிகரமாக பயிற்சியை முடித்தபின் ஆகக்குறைந்தது 10 வருடங்களாவது அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவரெனபதற்குமாக ஓர் ஒப்பந்தத்திலும் முறியிலும் ஒப்பமிடுமாறும் வேண்டப்படுவர். முறியின் பெறுமதி ரூபா 23,000 ஆகும்.

(ii) பயிற்சி நெறியானது, புகையிரதப் பகுதி பிரதான பொறியியலாளர் (பாதையும் வேலையும்) விதித்தவாறமையும். நியமிக்கப்பட்ட அபேட்சகர்கள் இபபயிற்சிக் காலத்துள், அனுபவம் பெறுதற்கும், பொறுபபுணர்சசி மேறபடுதற்கும், புகையிரத வேலையைப் பற்றிய பரந்தறிவேற்படுதற்குமாக, மேலதிக வேதனமெதுவுமின்றி எப்பதவியையாயினும் வகிக்குமாறு, அல்லது எக்கடமைகளையாயினும் ஆற்றுமாறு வேண்டப்படுவர்.

(iii) நியமிக்கப்பட்டவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் காலத்திற்குள பின்வரும் பரீட்சைகளில் சிறப்புத்திறனுடன் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர் :—

(அ) புகையிரதப் பகுதி பாதுகாப்பு விதிகளும் பிரமாணங்களும்,

(ஆ) புகையிரதப் பகுதி (பரிபாலன) அறிவுறுத்தல்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், அரசாங்க நடைமுறைக் கைந்நூல் விதிகள் (புகையிரதப் பகுதியைப் பொறுத்தவரையிலான) நிதிப் பிரமாணங்கள்.

(இ) பாதையும் வேலையும் பற்றிய சிறப்பு விதிகள்.

(iv) அவர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்துள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளில சித்தியெயதுதல் வேண்டும்.

(v) ஒவ்வொரு தனிபபட்ட பயிற்சியாளனின் தேவையைப் பொறுத்து எந்தப் பிரிவிலுமுளள பயிற்சிககாலத்தை புகையிரத பொது முகாமையாளர் தம் தற்றுணிபுபபடி மாற்றலாம். பயிற்சியாளர்கள் பயிற்சியின் எநதக் காலத்திலாவது கூறபபட்ட பொருத்தமான எந்த நிபந்தனையிலாவது திருத்தியளிக்காவிட்டால் அல்லது தஙகள் வேலைகளிலும் குண நடைகளிலும் திருததியான அறிககையெடுக்காவிட்டால, நியமனத்திலிருந்து நீக்கப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிகளுக்குரிய சம்பள அள்வுத் திட்டம் வருமாறு :—

ரூபா 7,800—360 × 3—8,880/9,600—360 × 4—480 × 11—16,320/—
(ரூபா 9,600 க்கும, ரூபா 13,920 க்கும் முன் வினைத்திறமைகாண் தடைகளுள).

**குறிப்பு :**

(i) நியமிக்கப்படுவோர் மேற்கூறிய சம்பள அளவுத் திட்டத்தில், ஆண்டுக்கு ரூபா 13,440 க்கு மேல் சம்பளம் பெறுதற்கு, ஏ. எம். ஐ. வீ. ஈ. (லண்டன) அல்லது இலங்கை பொறியியலாளர் கழகத்தின் இணையுரிமை (எவ். ஐ. ஈ. இலஙகை) அல்லது உறுப்புரிமை (எம்.ஐ.ஈ. இலஙகை) த் தகைமை பெறுமாறு வேண்டப்படுவர்.

(ii) ஏ.எம்.ஐ.வீ.ஈ. (லண்டன) அல்லது இலங்கைப் பொறியியலாளர் கழகத்தின் இணையுரிமை (எவ்.ஐ.ஈ. இலங்கை) அல்லது உறுப்புரிமை (எம்.ஐ.ஈ. இலங்கை)த் தகைமையுடன் ஓர் அபேட்சகர் தெரிவு செய்யப்பட்டால், மேற்குறிபபிட்ட சம்பள அளவுத் திடடத்தில் ஆண்டுக்கு ரூபா 9,960 ஆரம்பச் சம்பளத்தில் நியமிககப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஏ.எம்.ஐ.வீ.ஈ. (லண்டன்) அல்லது இலங்கைப் பொறியியலாளர் கழகத்தின் இணையுரிமை (எவ்.ஐ.ஈ. இலங்கை) அல்லது உறுப்புரிமை (எம்.ஐ.ஈ. இலங்கை)த் தகைமையை ஆண்டுக்கு ரூபா 9,960 ஐ அடையுமுன் பெற்றுக் கொண்டால், அத்தகைமையைப் பெற்ற திகதியிலிருந்து அவர் ஆண்டுக்கு ரூபா 9,960 சம்பளத்தைப் பெற உரிமையுடையவராவார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் தாம்—

(அ) சிறந்த நற்குணமும் உடற்றகுதியுமுள்ளவர் என்பதற்கும்,

(ஆ) 31.3.1970 ம் திகதியன்று 21 வயதிற்குக் குறையாதவரும் 30 வயதிற்கு மேற்படாதவருமாவர் என்பதற்கும்,

(இ) (i) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடியியற் பொறியியலாளர் பட்டம் அல்லது அதற்குச் சமமான நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர் ; அல்லது

(ii) இலண்டன் குடியியற் பொறியியலாளர் கழகப் பரீட்சையில், I ம், II ம் பகுதிகளிற் சித்தி, அல்லது அதற்குச் சமமான தராதரம் உள்ளவர் ; அலலது

(iii) இலங்கைக் குடியியற் பொறியியலாளர் கழகப் பரீட்சையில், I ம், 1 " பி ", II ம் பகுதிகளில் சித்தி பெற்றுள்ளார், என்பதற்கும் திருத்தியான சான்று சமர்பபித்தல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) புகையிரதப் பகுதியில் பணியாற்றுபவர்கள், மேற்கூறிய பொருத்தமான தராதரஙகளையுடையவராயிருபபின், விணணபபஙகள் ஏற்றுக்கொள்ளபபடும் கடைசித் திகதியன்று 30 வயதிற்கு மேற்பட்டவராயிருப்பினும் 40 வயதிற்கு மேற்படாதவராயின் விண்ணப்பிக்கலாம்.

(ii) 1961 ம் ஆண்டின் 70 ம் இலக்க கட்டாய அரசாங்க சேவைச் சட்டத்தின்கீழ் பொறியியலாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பொறியியலாளர்களும இபபதவிகளுககு விணணப்பிக்கத் தகைமையுடையவராவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் சமர்பபிக்குமாறு வேண்டும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும :—

(அ) பிறபபுப் பதிவுச் சான்றிதழ்—(**முக்கிய கவனிப்பு**—சமயதீட்சைச் சானறிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுபபின பொருட்டு வழங்கப்பட்ட சானறிதழ்கள் ஏற்றுககொளளப்படமாட்டா).

(ஆ) பலகலைக்கழகப் பட்ட அலலது மிகவுயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சானறிதழ்கள் இரண்டு—இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர் அலலது கலலூரி ஆசிரியர் அலலது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருததல் வேண்டும்.

(ஈ) தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழினுட்பத்தகைமைச் சானறிதழ் அலலது இவையிரண்டும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம ஆகியவற்றில் சித்தியடைந்த மிகவுயர்ந்த பரீட்சைச் சானறிதழ்

**குறிப்பு :**

(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணபபப படிவத்துடனிணைககக்கூடாது.

(ii) சாதனஙகளைச் சமர்பபிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்பபிக்கததவறும் அபேடசகர்களின் விண்ணபபங்கள் கவனிக்கப்படமாடடா.

6. அரசாஙக சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைககளத தலைவாகளுககூடாக அனுப்புதல் வேணடும். எனினும் அவாகள தாம் விண்ணபபமனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக் குழுவின செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அநத அறிவித்தல, விணணப்பக் கடைசித் திகதியனறு அல்லது அதற்குமுன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேணடும். விணணபபப் படிவத்துடன் அவாகளுக்கு வழங்கபபடும் அசசிடட அஞசலட்டையை (" ஆ " எனக் குறியிடப்படடுள்ளது) இதன் பொருடடு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிடடு அனுபப வேணடுமேயன்றி இத்திணைக்களத்திலுளள எந்தவுத்தியோகத்தருக்காயினும் நேராக அனுபபக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இநத வர்த்தமானியில I ம் பாகம, II ம் பிரிவில பிரசுரிக்கப்பட்டுளளன. அவறறைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுபபப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை (" அ " எனக் குறியிடப்படடுள்ளது), அதனகண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணபபககாரர் நிரபபித் திருபபியனுப்புதல வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின விண்ணப்பஙகள் பெற்றமைபற்றி அறிவிக்கபபடமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூனறு வாரங்களுக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப பெறாவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளருககு அறிவித்தல் வேண்டும். இந்த ஏறபாட்டினபடி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணபபத்தைக் கவனிக்கும்படி கேடகுமுரிமை எதுவுமுடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ௵ மார்சசு ௴ 5 ந் உ.

3-172/1—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897.

No. AA 107/X 2215/70

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### பொறியியலாளர் பதவி

காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 31.3.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 3.4.1970.

**குறிப்பு**

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும், முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையினுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்ட உள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். நியமதாரி முதற்கண் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஒரு அரசாங்க சேவையாளராயின் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதிற் கடமை புரியுமாறு அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு,—

(அ) ரூபா 7,800—3 × 360— ரூபா 8,880/9,600—4 × 360 அத்துடன் 11 × 480 வருடாந்த சம்பளம் ரூபா 16,320 வரை உயரும். வருடாந்த சம்பளம் ரூபா 9,600 க்கு முன்பும் ரூபா 13,920 க்கு முன்பும் வினைத்திறமைகாண் தடை.

(ஆ) வருடாந்த சம்பளம் ரூபா 13,440 க்கு மேற்செல்வதற்கு முழுத் தொழிற் தகைமைகளும் அவசியமாகும். இத்துடன் ஓர்வினைத் திறமை காண் தடையாகக் கருதப்படும்.

(இ) பூரண தொழிற் தகைமைகளையுடைய அபேட்சகர்கள் ரூபா 9,960 வருடாந்த ஆரம்பச் சம்பளமாகப் பெற அனுமதிக்கப்படுவர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்:

(அ) 31.3.1970 ம் திகதி 21 வயதிற்குக் கீழ்ப்படாதவராகவும் அல்லது 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையினுள்ளோருக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது).

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(இ) (i) இலங்கைப் பல்கலைக்கழகத்திலோ அல்லது அதே மதிப்புள்ள பல்கலைக்கழகத்திலோ எந்திரவியலில் பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) எந்திரவியல் பொறியியலாளர் நிறுவக (இலண்டன்) த்தின் பட்டதாரி அங்கத்துவம் பெற்றவராகவோ அல்லது இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தின் எந்திரவியல் பொறியியலாளருக்கான பட்டதாரி அங்கத்துவம் பெற்றவராகவோ அல்லது சமமான அல்லது

(iii) (எப். ஐ. ஈ. இலங்கை) இணையுரிமைப்பரிசு அத்துடன் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தில் (எம். ஐ. ஈ. இலங்கை) அங்கத்துவம் அல்லது சமமான தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் (மு. கு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப்பட்ட அல்லது மிகஉயர்ந்த கல்விச்சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர் கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) பெற்ற உயர்தொழிற்றகைமையும் அத்துடன்/அல்லது தொழில்நுட்பத் தகைமையும்.

(உ) சிங்களத்திலும் அத்துடன்/அல்லது தமிழிலும் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள்.

**குறிப்பு**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையோ அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையோ செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்குக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவர் ஆகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மாச்சு மீ 5 ந் உ.

3-172/2—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897.

## இலங்கை தரைப்படையில் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை தரைப்படையின் தொழிற் சேவைகள், இலங்கை பொறியியலாளர்கள் பிரிவில் அரண் காவல் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு இரண்டாவது லெப்டினன்ட் பதவியில் அமர்த்தப்படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரருக்க 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக் கோவையின்படி சம்பளமும் சகாயப்படியும் வழங்கப்படும். லெப்டினன்ட் கேர்ணல் பதவி வரையில் உள்ள சம்பள விகதம் பின்வருமாறு :—

இரண்டாவது லெப்டினன்ட் : வருடம் ரூபா 4,500

லெப்டினன்ட் : வருடம் ரூபா 4,860 ல் இருந்து 5,580 வரை. வருடம் ரூபா 180 ல் ஆன இரண்டு சம்பள ஏற்றமும், ரூபா 360 ஆன ஒரு சம்பள ஏற்றமும் ;

கப்டன் : வருடம் ரூபா 6,660 ல் இருந்து 7,740 ரூபா வரை. வருடம் ரூபா 180 ல் ஆன ஆறு சம்பள ஏற்றமும் .

மேஜர் : வருடம் ரூபா 8,820 ல் இருந்து 9,900 வரை. வருடம் ரூபா 180 ல் ஆன ஆறு சம்பள ஏற்றமும்.

லெப்டினன்ட் கேர்ணல் : வருடம் ரூபா 12,105 ல் இருந்து 13,455 ரூபா வரை. வருடம் ரூபா 225 ல் ஆன ஆறு சம்பள ஏற்றமும்.

(ஆ) கீழ்க்காணப்படும் சகாயப்பணமும் கொடுக்கப்படும்:—

(i) அரசாங்கத்தினுல் அனுமதிக்கப்பட்டபடி பொது உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியும் வாழ்க்கைச் சிறப்புப்படியும் உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தலம் ஒன்றில் இடமளிக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும். வாசஸ்தலங்களில் இடமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இப்படிகள் வழங்கப்படமாட்டாது ;

(ii) விவாகமான உத்தியோகத்தர்களுக்கு சேவை அல்லது அரசாங்கத்தினுல் வழங்கப்படும் விவாக இலலங்கள் கொடுக்கப்படாதவிடத்தும் விவாகமாகாத உத்தியோகத்தர்களுக்கு நியமனத்திற்கேற்ப வாசஸ்தலங்கள் அளிக்கப்படாதவிடத்தும் பொது உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினுல் விதிக்கப்பட்டபடி வீட்டு வாடகைகள் வழங்கப்படும் ;

(iii) விவாகமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளே வசிக்கும்படி ஆணையிடப்பட்டால் உள்ளே வசிக்கும் ஒவ்வொரு 24 மணித்தியாலத்திற்கும் ரூபா 1.50 வீதம் பிரிந்திருக்கைப்படி வழங்கப்படுவதுடன் உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தல வசதி அளிப்பதுடன் தரைப்படையினுல் உணவும் வழங்கப்படும். இக்காலங்களில் வாழ்கைச் செலவுப்படி, சிறப்புப்படி, சகாய உறையகப்படியோ வழங்கப்படமாட்டாது ;

(iv) பிரயாணப்படிகள், (உணவுச்செலவுகள், தங்குமிட மைற்கூலி, இடமாற்றக் கூலி) ஆகியனவை அரசாங்கத்தினுல் பொது உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்டபடி வழங்கப்படும் ;

(v) மற்றைய படிகள் (அணியடுக்கு, கோலவுடை பேணல் மற்றும் சேவையாளர் படிகள்) 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக் கோவையின்படி வழங்கப்படும் ;

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்கானப்படும் ஒழுங்குவிதிகளின்படியும், அவரவர்களின் சம்பளம், சேவைக்கேற்பவும் ஆளப்படும்:—

(i) 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் திகதியிடப்பட்ட 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக் கோவையின் பிரகாரமும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க ;

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ம் திகதி 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக் கோவையின் பிரகாரமும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க ;

(iii) 1961 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ம் திகதியிடப்பட்ட 12,680 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை உபகாரச் சம்பள பணிக்கொடைச் சட்டக் கோவைக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க.

மற்றும் ஏனைய தகவல்கள் கொழும்பு, தரைப்படை தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :

(அ) **தேசிய இனம்.**—இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும் ;

(ஆ) **வயது.**—விண்ணப்பகாரர்கள் 1970.4.2 ஆந் திகதியன்று 28 வயதுக்குக் கூடாதவர்களாயிருத்தல் வேண்டும் ;

(இ) **கல்வித்தகைமையும் உயர்தொழில் தகைமையும்.**—விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணப்படுபவற்றில் ஏதாவது ஒன்றில் தகைமை உடையவர் என அத்தாட்சிப்படுத்தல் வேண்டும் ;

(i) லண்டன் சிவில் பொறியியலாளர்கள் ஸ்தாபனத்தால் நடாத்தப்பட்ட 1 வது 2 வது பரீட்சைகளை சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**அல்லது**

(ii) பிரசித்தி பெற்ற ஸ்தாபனமொன்றினுல் 1 வது (பிரிவு அ, ஆ) பட்டதார பொறியியல் பகுதியை சித்தியடைந்திருத்தல் வேண்டும், அத்துடன் கடைசி 2 வது பிரிவு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிவாய்ந்தவர் என்று கூறப்பட்டிருத்தல் வேண்டும் ;

**அல்லது**

(iii) ஏ. எம். ஐ. ஸீ. ஈ. பரீட்சையின் 1 வது பகுதி (பிரிவு அ, ஆ) பகுதியை சித்தியடைந்திருத்தல் வேண்டும், அத்துடன் பகுதி 2 க்காக பயிற்சியடைந்திருத்தல் வேண்டும் ;

**அல்லது**

(iv) பொது வேலைத் திணைக்களத்தினுல் நடாத்தப்பட்ட முழுப் பரீட்சைகளையும் முடித்தவராயும் உதவி எஞ்சினியர் பதவிக்கு தகுதியுடையவராயிருத்தல் வேண்டும் ;

**அல்லது**

(v) சிவில் கனிஸ்ட நுண்தொழில் உத்தியோகத்தர் பரீட்சையை சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் மூன்று வருட அனுபவம் இருத்தலுடன் அரசாங்க திணைக்களங்களில் அல்லது பெரு பொறியியல் ஸ்தாபனங்களில் தொழில் செய்திருத்தல் வேண்டும் ;

(ஈ) **வைத்திய தகைமைகள்.**—விண்ணப்பகாரர்கள் தரைப்படை வைத்திய பரிசோதனைகளுக்கு உள்ளாதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் யாவும் கீழ்கொடுக்கப்பட்டுள்ள மாதிரிபடிவத்தினைப்போன்று எழுதப்பட்டு 1970.4.2 திகதியன்று நணபகல் 12 மணிக்குப் பிந்தாமல் தரைப்படை தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடிதவுறையில " விண்ணப்பங்கள் அரண் காவல் பொறியியலாளர் " என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு திகதிக்குப்பின இத்தலைமை நிலயத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்களு வழங்கப்படமாட்டாது.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை தம் திணைக்களத் தலைவருக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்களைச் சேவையில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். தரைப்படை பணிக்கொடை சேவைக்குச் சேர்த்துக்கொள்வற்கு தம் திணைக்களத்தினுல் அத்திணைக்களத் தலைவரினுல் கொடுக்கப்பட்ட சான்றிதழ் அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறு செய்யப்படாவிடின் தரைப்படை பணிக்கொடைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் இவைகளின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித்தகைமைகளையும் உயர்தொழில் தகைமைகளையும் தல்பிக்கும் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட குறைந்தபட்சம் இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள்.

8. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களில் இருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இதன்பின் இறுதித் தெரிவு, தெரிவு செய்யப்பட்டவர்களில் இருந்து பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினுல் ஆக்கப்பட்ட தேர்வுச்சபையொன்றினுல் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும். நேர்முகப்பரீட்சைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப்பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்விதம் பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினுல் வழங்கப்படமாட்டாது.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4 விகிதமானதை தமது உதவு தொகையாக படைக்கலந் தாங்கு சேவைகளின் விதவை அநாதை உபகாரச் சம்பள நிதிக்கு வழங்குவதற்கு எழுத்து மூலம் தமது சம்மதத்தைக் கொடுத்தல் வேண்டும்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

1970 ம் ௵ மாச்சு மீ 2 ந உ.

## இலங்கை தரைப்படையில் தொழிற்சேவைகள், இலங்கை பொறியியலாளர் பிரிவில் அரணகாவல் பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.

2. தேசிய இனம் (பரம்பரையான இலங்கை பிரசையா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கை பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்) : ————.

3. முகவரி :—
வீட்டு விலாசம் : ————.
அலுவலக விலாசம் : ————.

4. பிறந்த திகதி : ————.
1970.4.2 ஆம் திகதியன்று வயது :—
———— வருடம், ———— மாதம், ———— நாள்.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய முகவரியும் : ————

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா : ————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகள் சம்பந்தமாக நீர் பெற்ற தனிச் சிறப்புகள் : ————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் : ————.

9. இலங்கை தொண்டர்படை, இலங்கை சாரணர் படை, இலங்கை பயிலுநர் சிறப்பணி, முதலிய தொண்டர் நிறுவகங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரங்கள் : ————.

10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்கு வேறு என்ன விசேட தகைமைகள் உண்டு என்பதை குறிப்பிடுக : ————.

11. இதற்குமுன் படைக்கலந்தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருப்பின் அதன் முடிவு யாதெனக் குறிப்பிடுக : ————.

12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :—

| பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையின பெயர் | திகதி | | பொது/உயர்தொழிற் கல்வி சித்தியெய்திய பாடங்கள் |
|---|---|---|---|
| | சேர்ந்த | விலகிய | |
| | | | |

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களை கீழே தருக :—

| வேலைகொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவை செய்த காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

14. குணச் சான்றுப்பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரிகளும் : ————.

மேகொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவிற்கெட்டிய வரையில் அவை சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ——— ——.

3–126—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### நிறைவேற்றும் உத்தியோகத்தர் பதவிகள் (Executives)

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் நிறைவேற்றும் உத்தியோகத்தர் தரத்திலுள்ள வெற்றிடங்களுக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரிகள், குறைந்தது பின்வரும் தகைமைகளுடையவராய் இருத்தல் வேண்டும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பகிரங்க சேவையில் நிறைவேற்றும் உத்தியோகத்தராக (Staff Officer) அல்லது பெரும் வர்த்தக நிறுவனமொன்றில் உயர் நிறைவேற்றும் உத்தியோகத்தராக 5 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 1.3.70 ஆந் திகதியன்று 40 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

3. இப்பதவிகளுக்கான சம்பளத்திட்டம் ரூபா 1,000—50 × 10—ரூபா 1,500 ; தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் அவர்களது தகைமைகள், அனுபவம் என்பவற்றைப் பொறுத்து சம்பள விகிதத்தில் ஏற்ற ஒரு நிலையில் நியமிக்கப்படலாம்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர் ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 10 சதவீதத்தைச் செலுத்த, ஸ்தாபனம் சம்பளத்தில் 15 சதவீதத்தைச் செலுத்தும்.

அரசாங்க சேவையில அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் உள்ளோரின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வுத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்படின் அவர்களை அவர்களது வேலையிலிருந்து விலக இத்தகைய நிறுவனங்களின் தலைவர்கள் அனுமதியளித்தாலதான, இவர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

அனுபவம், தகைமைகள் முதலியவற்றின பொருட்டான விவரங்களைக் கொண்ட விண்ணப்பங்கள் 1970 மார்ச் 20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ ஆளணி முகாமையாளர், கூ. மொ. வி. ஸ்., 21, வாக்சால் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஆளணி முகாமையாளர்.

கூ. மொ. வி. தலைமைக் காரியாலயம்,
21, வாக்சால் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ௵ பெப்பிரவரி மீ 25 ந உ.

3 88—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### கட்டட மேற்பார்வையாளருக்கான பதவிகள்

காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் கட்டட மேற்பார்வையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அடையக் கூடியதாகக் காணி அபிவிருத்தி அதிபர், கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும்.

2. இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பளத்திட்டம் ரூபா 4,152—16 × 144—ரூபா 6,456/- (வருடாந்த சம்பளம் ரூபா 5,304 /ஐ அடைவதற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை.)

3. **வேண்டிய தகைமைகள்.**—

(அ) **வயது.**—விண்ணப்பம் முடிவுறும் திகதியன்று 20 வயதிற்குக் குறையாதவர்களாகவும், 35 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
அத்துடன்

(ஆ) **கல்வித்தகைமைகள்.**—தூயகணிதத்தை ஒரு பாடமாகக் கொண்ட சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சைச் சான்றிதழை உடையவராய் இருத்தல் வேண்டும். அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழியுடன் தூய கணிதம் உட்பட ஆறுபாடங்களில் இரண்டுக்கு மேற்படாத இருக்கைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவ்விரண்டு இருக்கைகளில் ஒருதடவையில் ஐந்துபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது ஏதாவது சமமான அல்லது உயர் தரப் பரீட்சையொன்றில் தூயகணிதம் ஒருபாடமாகச் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(இ) **தொழில் நுட்பத் தகைமைகள்.**—பின்வருவனவற்றில் ஏதாவது தொன்றையுடையவராய் இருத்தல் வேண்டும்.

(i) பின்னிணைப்பு 1ன் பிரகாரம் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பரீட்சையில் உபபரிசோதகர்கள் தரம் 1 க்குரிய தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டட நிருமாணிப்பு, கட்டடக்கலை அல்லது கட்டுமான பொறியியல் முதலியவற்றில் முழுநேரப் பயிற்சிநெறியைத் திருப்திகரமாக நிறைவேற்றியவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் சான்றிதழுக்கான பகல்நேர முழுப் பயிற்சிநெறியை முடித்தவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(iv) கல்ஓயா அபிவிருத்திச் சபையின் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் தகுதித்தேர்வுப் பத்திரம் (டிப்புளோமா) பெற்றவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஈ) **அனுபவம்.**—பொதுக்குடியியல் பொறியியல் வேலைகளில் அல்லது கட்டட நிருமாணிப்புப் பயிற்சியில் குறைந்தது 5 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் உடையதுமாகும். நியமனம் முதற்கண் மூன்றுவருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் உள்ளதாகும். நியமிக்கப்பட்டவர்கள் தீவின் எப்பகுதியிலும் கடமையாற்றுதல் வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தவர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்குக.

6. தற்போது அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவர்களுக்கூடாக அனுப்ப வேண்டும். உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படின் அவரை விடுவிக்க முடியும் என்பதை அத்திணைக்களத்தலைவர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டால் மட்டுமே கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ii) உயர்கல்விச் சான்றிதழ்.

(iii) தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ்—மேலே 3 (இ) யின் பிரகாரம்.

(iv) 5 வருட அனுபவத்தையுடையவரென்பதற்கு ஆதாரமாக அத்தாட்சிப்பத்திரம் அல்லது சான்றிதழ்—மேலே 3 (ஈ) யின் பிரகாரம்.

(v) அண்மையில் பெறப்பட்ட இரண்டு நற்குணச் சான்றிதழ்கள். (ஏலவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இதை இணைக்க வேண்டியதில்லை).

8. விண்ணப்பம் முடிவுறும் திகதிக்குப் பின்னர் இவ்வலுவலகத்தில் வந்து சேரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

அமரதாச குணவர்த்தன,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
கொழும்பு 1, 1970 மார்ச்சு 4 ந் திகதி.

#### பின்னிணைப்பு—1

கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் பரீட்சையில் உப பரிசோதகர்கள் தரத்தில் தகுதி பெறுவதற்கான பரீட்சையின் பாடத் திட்டம்.

| | பாடம் | க.தொ.உ. பாடத் திட்டம் இல. |
|---|---|---|
| 1. | எண்கணிதமும், அட்சரகணிதமும் .. | 1 |
| 2. | கேத்திர கணிதம் .. .. | 2 |
| 3. | அளவுகள் எடுத்தல் .. .. | 3 |
| 4. | அளத்தலும், மட்டம் பார்த்தலும் .. | 4 |
| 5. | படம்வரைதலும், சுவடு வரைதலும் .. | 5 |
| | அத்துடன், பின்வருவனவற்றில் ஏதாவது 2,— | |
| 6. | வேலைத்தலப் பயிற்சி .. .. | 6 |
| 7. | ஆரம்பக்கட்டட நிருமாணிப்பும், பேணுதலும் .. | 7 |
| 8. | வீதி நிருமாணிப்பும், பேணுதலும் .. | 8 |
| 9. | நீர் வழங்கலும், வடிகாலும் .. .. | 9 |

## விண்ணப்பப் படிவம்

### கட்டட மேற்பார்வையாளர் பதவி
### காணி அபிவிருத்தித் திணைக்களம்

1. முழுப் பெயர் :————.
குடும்பப் பெயர் :————.
ஏனைய பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. தேசிய இனம் :————.

4. 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ந் திகதி வயது :————.

5. பிறந்த திகதி :————.
(பிறப்பத்தாட்சிப் பத்திரம் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

6. கல்வித் தகைமைகள். பரீட்சைத் திகதிகளும், சித்தியடைந்த பாடங்களும் (சித்தியடைந்த உயர் பரிட்சை சம்பந்தமான சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :————.

7. விளம்பரத்தின் பந்தி 3 (இ) யின் கீழ் நீர் பெற்ற தொழில் நுட்பத் தகைமைகள். உமது கூற்றுத் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்குக :————.

8. விளம்பரத்தின் பந்தி 3 (ஈ) யின் கீழ் நீர் பெற்ற அனுபவத்தைக் கூறுக, உமது கூற்றுத் தொடர்பான சான்றிதழ் அல்லது அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்குக :————.

9. நற்குணச் சான்றிதழ்கள் வழங்கியோரின் பெயர்களும், முகவரிகளும் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்குக) :————.

10. தற்போதைய தொழிலும் சம்பளமும் :————.

11. வேறு ஏதாவது விசேட தகைமைகள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், தேர்வுக்குப் பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

3—124—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/10/1 (ஜீ)

1955 ஒற்றோபர் 1 ஆந் தேதியின் 1,844 ஆம் இலக்க அரசாங்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொது எழுதுவினைஞர் சேவை பற்றிய குறிப்பின் 5 (ii) ஆம் பந்தியின் கீழ் பொது எழுதுவினைஞர் சேவையின் நிருவாக எழுதுவினைஞர் வகுப்பில் II ஆந் தரத்துக்குப் பதவியேற்றம் பெறுவதற்குக் கீழ்க் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| அளகரத்தினம், எம். .. | .. உணவு |
| அளகேந்திரா, டி. சி. .. | .. தேசியமய சேவைகள் அமைச்சு |
| அம்பலவாணர், எஸ். .. | .. துறைமுக அதிகார சபை |
| அத்தநாயக்கா, வி. .. | .. பெருந்தெருக்கள் |
| கயிலேஸ்வரன், சி. .. | .. கூட்டுறவு அபிவிருத்தி |
| கல்தேரா, ரி. ஆர். .. | .. மின்சாரம் |
| செல்லராசா, சி. .. | .. வன |
| குறூஸ், சி. ஜே. .. | .. துறைமுக அதிகார சபை |
| குமாரபிள்ளை, ஐ. வி. .. | .. தொழில் |
| த சில்வா, ஜீ. ஜீ. .. | .. பதிவாளர் நாயகம் |
| த சில்வா, எம். கே. என். | .. கட்டடங்கள் |
| த சில்வா, வி. ஆர். .. | .. ஆசிரியர் விதவைகள் அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள காரியாலயம் |
| டயஸ், பி. எ. எல். .. | .. மாவட்ட நீதிமன்றம், மாத்தறை |
| திஸநாயக்க, எம். கே. பி. என். | .. பதிவாளர் நாயகம் |
| தொடன்வல, ஆர். பி. .. | .. விவசாயம் |
| எக்நலிகொட, இ. வி. .. | .. பெருந்தெருக்கள் |
| பர்ணந்து, எ. ரி. ஙியூ. .. | .. சந்தைப்படுத்தல் |
| பர்ணந்து, கே. இ. .. | .. உண்ணாட்டு இறைவரி |
| பர்ணந்து, கே. ஜீ. டபிள்யு. | .. சௌக்கிய |
| பர்ணந்து, எல். எல். இ. | .. கச்சேரி, குருணகல் |
| பர்ணந்து, எம். சி. வி. | .. சௌக்கிய |
| குணரத்ன, ஜி. எச். த எஸ். | .. காணி அபிவிருத்தி |
| குணசேகர, எ. டி. .. | .. பொலிஸ் |
| குணசேகர, என். எ. எஸ். டி. | .. கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு |
| குருஹே, எ. .. | .. கச்சேரி, காலி |
| ஹென்றிகஸ், சி. பி. .. | .. சௌக்கிய |
| ஹியுபேட், இ. ஆர். .. | .. சிவில் விமானப்போக்குவரத்து |
| குசேயின், என். எம். எம். | .. கைத்தொழில் மீன்பிடி அமைச்சு |
| இலுக்கும்புற, இ. .. | .. கல்வி |
| ஜய்மன், எம். ரி. .. | .. பெருந்தெருக்கள் |
| ஜயவர்தன, ஜே. எஸ். சி. த எஸ். டபிள்யு. | உண்ணாட்டு இறைவரி |
| கஹின்கல, இ. .. | .. பொதுத் திறைசேரி |
| கனகசபாபதி, செல்வமுத்து | .. கச்சேரி, வவுனியா |
| கணபதிப்பிள்ளை, எஸ். | .. பிஷ்கால் காரியாலயம், யாழ்ப்பாணம் |
| குலதுங்க, எப். .. | .. நீதவான் மன்றம், மாத்தறை |
| குலதுங்க, டபிள்யு. எம். ஜி. | .. காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு |
| மாணிக்கவாசகர், பி. .. | .. சமூக சேவைகள் |
| நடராசா, எம். வி. .. | .. கிராம நீதிமன்றம், முல்லைத்தீவு |
| நாகலிங்கம், எஸ். .. | .. மாவட்ட நீதிமன்றம் புத்தளம் |
| நகந்தல, சி. பி. .. | .. மோட்டார் போக்குவரத்து |
| ஒக்கொர்ஸ், எ. .. | .. கச்சேரி, மட்டக்களப்பு |
| பத்மநாதன், கே. .. | .. பெருந்தெருக்கள் |
| பெரேரா, ட. எம். .. | .. கச்சேரி, கொழும்பு |
| பெரேரா, எச். டி. எச். டி. எல். | .. துறைமுக அதிகாரசபை |
| பெரேரா, எச். கே. எஸ். | .. பிசுக்கால் மேல் மாகாணம் |
| பெரேரா, ஜே. .. | .. பொலிஸ் |
| பெரேரா, கே. எச். .. | .. வானிலை ஆராய்ச்சி |
| பெரேரா, எம். டபிள்யு... | .. கச்சேரி, மொனறாகலை |
| பியசேன, டி. சி. .. | .. விவசாய உணவு அமைச்சு |
| பியதிஸ்ஸ, என். எச். .. | .. சௌக்கிய |
| பொன்னுத்துரை, எஸ். | .. கணக்குப் பரிசோதனை |
| ராஜகருண, ஆர். எல். எ. என். | .. சிவில் விமானப்போக்குவரத்து |
| ராஜபக்ஷ, இ. .. | .. நீர்ப்பாசன |
| ரணசிங்க, என். .. | .. உண்ணாட்டு இறைவரி |
| ரணவீர, டி. ஜே. த எஸ். | .. நீதவான் மன்றம், களுத்துறை |
| இரத்தினசபாபதி, என். | .. கச்சேரி, யாழ்ப்பாணம் |
| இரத்தினம், எஸ். வி. .. | .. கணக்குப் பரிசோதனை |
| உருத்திரமூர்த்தி, எஸ். | .. கமத்தொழில் சேவைகள் |
| செபஸ்தியன்பிள்ளை, ஜே. எஸ். | .. உணவு |
| செல்லத்துரை, கே. .. | .. கச்சேரி, கேகாலை |
| செல்லத்துரை, இ. .. | .. கல்வி, யாழ்ப்பாணம் |
| சிறிவர்தன, ஜே. எம். டி. எஸ். எ. | .. கிராம நீதிமன்றம், மினுவான்கொட |
| சிறிவர்தன, எஸ். சி. த இசற். | .. குடிமதிப்பு புள்ளிவிபர |
| சிவநாதியன், ரி. .. | .. கிராம அபிவிருத்தி சிறு கைத்தொழில் |
| சிவபாதசேகரம், எஸ். .. | .. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு |
| சிவசுப்பிரமணியம், எஸ். | .. பெருந்தெருக்கள் |
| சுப்பிரமணியம், எஸ். .. | .. கணக்குப்பரிசோதனை |
| தம்பிராசா, என். .. | .. கச்சேரி, மட்டக்களப்பு |
| திருநாவுக்கரசு, எஸ். .. | .. கிராம அபிவிருத்தி சிறு கைத்தொழில் |
| வேதமாணிக்கம், வி. எச். டி. | .. உண்ணாட்டு இறைவரி |
| விதானபத்திரன, எஸ். பி. | .. கமத்தொழில் சேவைகள் |
| வர்ணகுல, டி. ஜே. .. | .. கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு |
| வீரசிங்க, பி. பீ. .. | .. காணி அபிவிருத்தி |
| விக்கிரமநாயக, ஜீ. டபிள்யு. | .. மாவட்ட நீதிமன்றம், களுத்துறை |
| விஜேகுணதிலக, ரி. எச். பி. | .. மாவட்ட நீதிமன்றம், கொழும்பு |
| விஜேசேகர, எல். .. | .. உள்ளூராட்சி அமைச்சு |
| விஜேதுங்க, எஸ். ரி. .. | .. நீர்ப்பாசன |

பி. டி. உடுவெல,
திறைசேரி மேலதிக பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 27 ந் உ.

3-90—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### இலங்கைப் பரீட்சைப் பகுதி

#### கழிவுக் கடதாசிகளின் விற்பனைக்கும் அவற்றை அகற்றுவதற்குமான கூறுவிலைகள்

1969 ஒக்டோபர் 1 ஆம் தேதி தொடக்கம் 1970 டிசெம்பர் 31 ஆம் தேதி வரை பரீட்சைப் பகுதியிற் சேர்ந்த பின்வரும் கழிவுக் கடதாசிகளின் விற்பனைக்கும் அவற்றை அகற்றுவதற்குமான கூறுவிலைகள் 1970 மார்ச் 26 ஆம் தேதி அன்று, பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பழைய விடைத்தாள்களும், பழைய வினாப்பத்திரங்களும், வழக்கில்லாத மாதிரிப் பத்திரங்களும்.
2. ஏனைய கழிவுக் கடதாசிகள் (உபயோகித்த கபில நிறக் கடதாசிகள், பெரிய காகித உறைகள், குப்பைக் கூடைகளிற் சேர்ந்த கடதாசிகள்).

விடைத்தாள்களும், வினாப்பத்திரங்களும், அவைகளின் அந்தரங்கமான தன்மை காரணமாக, அவைகளை அப்புறப்படுத்துவதற்கு முன்னர், கொள்வனவுகாரரின் செலவிலேயே, வெட்டும் பொறியிலிட்டு வெட்டப்படல் வேண்டும்.

கூறுவிலையில் ஒரு அந்தர் பழைய விடைத்தாள்களுக்கும் வினாப்பத்திரங்களுக்கும் வழக்கிலில்லாத மாதிரிப்பத்திரங்களுக்கும் உரிய விலை தனிப்படவும், ஒரு அந்தர் ஏனைய கழிவுக் கடதாசிகளின் விலை தனிப்படவும் குறிப்பிடப்படல் வேண்டும்.

ரூபா 100 ஐப் பரீட்சைப் பகுதியின் பெயரில் வைப்புப் பணமாகச் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் இலக்கமும் அது பெறப்பட்ட திகதியும், அனுப்பப்படும் ஒவ்வொரு கூறுவிலையிலும் குறிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

கூறுவிலை எற்றுக் கொள்ளப்பட்டதாக எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒருவர், மூன்று நாட்களுக்குள் அதை ஏற்றுக் கொள்ளத் தவறின், அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்பட்டுவிடும். எவர்களுடைய கூறுவிலைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவர் களின் வைப்புப்பணம், நாளடைவில், அவர்களுக்குத் திருப்பிக் கொடுக் கப்படும்.

கூறுவிலைப் பத்திரத்தைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் " கழிவுக் கடதாசிகளின் கொள்வனவுக்காக கூறுவிலைகள் " எனக் குறிப்பிடுதல் வேண்டும். உறையைச் சீல்பண்ணிப் பதிவுத் தபாலுறையிலிட்டு, பரீட்சாதிகாரி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கூறுவிலைகளை அனுப்பியவர்கள், கூறுவிலைகளைப் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதியிலன்று, மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தில் கூறுவிலை களைத் திறந்து பார்க்கும் பொழுது சமூகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படு வர்.

கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும், போயாவுக்கு முதனாளில் காலை 9 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் இக்கழிவுக்கடதாசியின் மாதிரிகளை இப்பகுதியிற் பார்வை யிடலாம்.

எவருடைய கூறுவிலை ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அவர், அறிவித் தலின் பேரில், செலுத்தவேண்டிய முழுத்தொகையையும் தாமதமின்றி உடனேயே செலுத்திய பின்னர், சேர்ந்த கழிவுக் கடதாசிகளை அப்புறப் படுத்தல் வேண்டும்.

இனம் (1) க்கு எவருடைய கூறுவிலை ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அவர், ரூபா 1,000 ஐ வைப்புப்பணமாக, இப் பரீட்சைப்பகுதியில் கட்டுதல் வேண்டும்.

கே. ரி. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

மலே வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆடு மார்ச் மீ 3 ந உ.

3–113—13.3.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### உபயோகிக்கத்தகாத பற்றறிகளினதும் கழிவுப் பொருட்களினதும் விற்பனை பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள விற்றுத்தீர்க்கும் வளவு

கொழும்பு 5, இருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 8.4.1970 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை, பொரலஸ்கமுவை, வெரகெரையி லுள்ள விற்றுத்தீர்க்கும் இ. போ. ச. வளவில் இருந்து உபயோகிக்கத் தகாத பற்றறிகளையும், றப்பர் டியூப்புக்கள், ஒட்டுமடிப்புக்கள், 45 கலன் கொள்ளளவு பீப்பாக்கள், உருண்டை றேசர்கள், செம்பு, வார்ப்பிரும்பு, தடுப்புக் குடங்கள், றிம்ஸ்கள், சில்லுக்குடங்கள், கலப்பு இரும்பு, ஹல் மில்லை வெட்டுத்துண்டுகள், வில் இலையுருக்கள், இரும்புவார்த்த அலுமினிய வெற்றுச் சாடிகள், போத்தல்கள், இரும்பு சேர்ந்த செம்பு, கழிவுக் கடதாசி முதலியனவற்றைக் கொண்ட மற்றைய கழிவுப் பொருட்களையும் கொள்வனவு செய்து எடுத்துச் செல்லுவதற் கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதியில் நண்பகல் 12.00 மணிவரை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதான பத்திரங்களில் பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு 5, இருல வீதி 200 ஆம் இலக்கத்தி லுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் தேவையான கேள்விப்பத்திரக் கட்டுப்பணத்தைக் காசாகக் கட்டி, இதன் பற்றுச் சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்கு முன் எனது அலுவல கத்தில் காட்டவேண்டும்.

மொத்தம் 3,000 ரூபா கட்டுப்பணம் செலுத்தும் கேள்வியாளர் விற்பனைக்கு உட்பட்ட எல்லாக் கூறுகளுக்கும் கேள்வியிட அனுமதிக்கப் படுவார்.

பொரலஸ்கமுவை, வெரகெரை விற்றுத்தீர்க்கும் இ. போ. ச. வளவில் வழமையான அலுவலக நேரங்களில் பொருட்களைப் பார்வையிடலாம்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான பொருட்களின் நிரலையும் கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் முதலியன பற்றிய மற்றைய விவரங்களையும் இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

வினியோகப் பகுதி,
200, இருல வீதி,
கொழும்பு 5.

3–168—13.3.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,897.

---

எனது இல. எல். டபிள்யூ./8/11

## கேள்வி அறிவித்தல்

அரசாங்கத்தில் ரூபா 15,000 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள தனிப்பட்ட கொந்திருத்துக்காரர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து கீழ்க்காணும் வேலைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளையோ செய்வதற்கான கேள்விகள், 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ந திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை புத்தளம் கச்சேரி கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(I) வண்ணாத்தவில்லு ம. வ. கு. திட்டக் காணித் துண்டுகள் இல் 60–62 இல் " கியூம் பைப் " மதகு அமைத்தல்.

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே மேலே கூறப்பட்ட ஒவ்வொரு வேலைகட்கும் தனித்தனியாக இவ்விரு பிரதிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். புத்தளம் கச்சேரியில் ரூபா 25 வைப்புப்பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைக்காண்பித்தே மேற்கூறிய ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப் பத்திரம் பெறமுடியும். கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ந திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள் புத்தளம் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படலாம். இன்றேல் பதிவுத்தபால் மூலம், தலைவர், கேள்விச்சபை, கச்சேரி, புத்தளம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர்,
புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1970 ம் ஆடு மார்ச் மீ 4 ந உ.

3–176—13.3.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,897.

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப் பத்திர அறிவித்தல்—ஸ்ராச்

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு 40 நீள்தொன் ஸ்ராச் வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வது 1970 மே 15 ம் திகதிமுடிவடையும். கேள்விப்பத்திரப் படிவங்களும், மற்றும் ஏனைய விபரங்களும் பொறுப்பு முதல்வர்கள் அல்லது வழங்குபவர்களின் பெயர்களும் விலாசங்களும் அடங்கிய விண்ணப்ப மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தி. ப. நாரனபனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

3-149—13.3.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,897.

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பீ. ஓ. பீ. பாதை, பெரியபண்டிவிரிச்சான்

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25/- கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி (21.3.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "பெரியபண்டிவிரிச்சான் பாதை" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக் கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி (21.3.70) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25/- பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 3 ம் திகதி.

3–203—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வடகாட்டுக்குப் பிரவேச பாதை அமைத்தல்.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25/- கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் " அரசாங்க அதிபர், மன்னார் " என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி (21.3.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "வடகாட்டுப் பிரவேசப் பாதை" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி (21.3.70) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25/- பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3 ம் திகதி.

3–204—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## உணவுத் திணைக்களம்

ஏறக்குறைய 29,000 அந்தர் நிறையுடைய வட்டானுப் பருப்பு கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கோரிக்கைகள் அழைக்கப்படுகின்றன. கோரிக்கையாளர்கள் தனித்தனி 1,000 அந்தருக்குக் குறையாத நிறை கொள்வனவு செய்யவேண்டும். கோரிக்கையாளர்கள் 1,000 அந்தருக்கு அதிகமாக அல்லது முழுவதையுமே கொள்வனவு செய்யலாம். கோரிக்கைகள் 24.3.70 பி.ப. 2.30 மணிக்கு மூடப்படும்.

2. கோரிக்கைகள் இணைப்படியில் ஒருறையுள் அடக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வுறையின் வலதுபக்க மேல்மூலையில் "கங்கேரியன் வட்டானுப் பருப்பு கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கோரிக்கைகள்" என எழுதப்பட்டிருக்கவேண்டும். இக்கடிதம் உணவு ஆணையாளர், 330, யூனியன் இடம், கொழும்பு 2 என்ற முகவரிக்குப் பதிவுக்கடிதத்தில் 23.3.70 பி.ப. 4.00 முன்னாக அனுப்பப்படவேண்டும். கோரிக்கையாளர்கள் பதிவுக் கடிதத்தில் அனுப்ப விரும்பாதுவிட்டால் தமது முகவர் மூலமோ தாமோ நேரில் வந்து முத்திரை பதித்த கோரிக்கையை உணவு ஆணையாளர் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கோரிக்கைப் பெட்டியில் இடலாம்.

3. கொழும்பு 2 இல் 330, யூனியன் இடத்தில் உள்ள உணவு ஆணையாளர் அலுவலகத்தில் இதற்கென மனுவின்பேரில் கொடுக்கப்படும் மனுப்பத்திரத்தை 20.3.70 மாலை 2.00 மணிக்கு முன்னாகப் பெறக்கூடிய விண்ணப்பத்திலேயே கோரிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

4. கோரிக்கைகள் 24.3.70 பி.ப. 2.45 மணிக்கு உணவு ஆணையாளர் அலுவலகம், 330, யூனியன் இடம், கொழும்பு 2 இல் திறக்கப்படும். கோரிக்கையாளர்கள் விரும்பினாற் கோரிக்கை திறக்கப்படும் சமயத்தில் வருகைதர அனுமதிக்கப்படுவார்கள். மேற் குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் கோரிக்கைகள் திறக்கப்படும். கோரிக்கை திறக்கும் அலுவலர் வருகை தந்திருக்கும் கோரிக்கையாளர்கள் முன்னாக கோரிக்கையாளர்கள் பெயர்களையும் அவர்கள் விதிதங்களையும் வாசிப்பார். கோரிக்கையாளர்கள், கோரிக்கை ஏதாவதொன்றைப் பரிசோதிக்க விரும்பினால் உணவு ஆணையாளருடன் ஏற்கெனவே செய்துகொண்ட ஒழுங்குகளின் மேல் அனுமதிக்கப்படுவார்கள்.

5. கோரிக்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள், கோரிக்கைகள் மூடப்பட்ட நாளிலிருந்து 4 வாரங்களுக்குச் செல்லுபடியான தாகவும் வலிவுள்ளதாகவும் இருக்கும். கோரிக்கைகள் ஒப்பமிடப்பட்டும் மாற்றங்களும் திருத்தங்களும் முதலெழுத்து ஒப்பமிடப்பட்டும் இருக்க வேண்டும். கோரிக்கையாளர்கள் கோரிக்கை நிபந்தனையின் ஒருபடியைக் கோரிக்கையோடு இணைக்கவேண்டும்.

6. ஒவ்வொரு 1,000 அந்தருக்கும் அதன் பின்னத்துக்கும் 500.00 ரூபா கட்டுப் பணம் உணவு ஆணையாளரிடம் இதே அலுவலகத்திற் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவித்தல் கிடைத்த 14 நாட்களுக்குள் ஒப்புக்கொள்ளப்பட்ட கோரிக்கைப் பொருளுக்கான பணத்தைச் செலுத்தி எடுத்துச் செல்லத் தவறும் கோரிக்கையாளரது கட்டுப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசாங்க நிதியிற் சேர்க்கப்படுவதோடு அக் கோரிக்கையாளரின் பெயர் அரசாங்கக் கோரிக்கைகளை மீறியவர்கள் பட்டியலிற் சேர்க்கப்படுவதோடு அரசாங்கக் கோரிக்கையோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பில் இருந்தும் விலக்கப்படத் தக்கவராவர். கோரிக்கையாளர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் பதிவுக் கடிதத்தில் அனுப்பப்பட்டால் அல்லது கோரிக்கையாளராற் கொடுக்கப்பட்ட முகவரியிற் கொடுத்திருந்தால் கோரிக்கையின் அறிவித்தலைப் பெற்றுக் கொண்டாரென மதிக்கப்படுவார். கோரிக்கையில் வெற்றியுருதவர்களின் கட்டுப்பணம் திருப்பியளிக்கப்படும்.

7. வட்டாணுப் பருப்பைச் சோதிக்க விரும்பியவர்கள் கொழும்பில் உள்ள சாமேசுக் கூலக்களஞ்சியத்தில், உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர் (சாமேசுக் கூலக்களஞ்சியம்) உடன் ஏற்கெனவே ஒழுங்குகளை மேற்கொண்டு வேலை நாட்களில் வழமையான வேலை நேரத்தில் சோதனை செய்து கொள்ளலாம்.

8. முழுக் கோரிக்கைகளையும் அல்லது ஏதேனும் ஒன்றை எவ்வித கேள்வி முறையுமின்றி நிராகரிக்கும் உரிமையை உணவு ஆணையாளர் தாமே வைத்திருக்கிறார்.

பதில் உணவு ஆணையாளர்.

தேதி 3.3.70

3–174—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகம்—1969/70

சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகித்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1970 ஆம் ஆண்டு எப்றில் மாதம் 4 ந் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.

3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 1970 ஆம் ஆண்டு எப்றில் மாதம் 3 ந் திகதி பி. ப. 4.30 மணிவரை பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகம்—1969/70" என அடையாளமிடப்பட வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப்படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக் கொண்டு பெற்றமையை ஒப்புக் கொள்தற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூ. 100 கட்டி, அப்பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.

7. விதிக்கபபடும் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 3 ந உ.

3–100—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## கட்டிடங்கள் திணைக்களம்

வவுனியா அரசினர் ஆஸ்பத்திரி புதிய ஆண்கள் வார்டுக்கு சீமந்துத் தகடுகள் பாவு (சீலிங்) (கூரையின் கீழ்) அடிப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் கட்டிடங்கள் திணைக்களம் வட பகுதி கண்காணிப்புப் பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கட்டிடங்கள் திணைக்கள வவுனியா மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப் படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப் பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலை கட்டிடங்கள் திணைக்களத்தில் ரூபா 7,600 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 25 செலுத்திய பற்றுச்சீட்டை 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 26 ந் திகதி வியாழக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களை கோர விரும்பும் விண்ணப்பகாரர் பற்றுச்சீட்டை கொடுக்கும்போது நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து தகுந்த பத்திரத்தைப் பெற்று அதில் கைவசமிருக்கும் வேலைகளின் விபரங்களைக் குறிப்பிட்டு அததற்கேற்ற கேள்விச்சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள கட்டிடங்கள் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

தெ. மாணிக்கம்,
கண்காணிப்பு பொறிவலாளர், வடபகுதி,
(கட்டிடங்கள்).

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம், வட பகுதி,
கட்டிடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்,
1970.3.2.

3–123—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## ஆயத்துறைகள் விற்பனவு

### திருகோணமலை மாவட்டம்

கீழ்க்காணும் ஆயத்துறைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் திருகோணமலை அரசாங்க அதிபரால் பொது மக்களிடமிருந்து கோரப்படுகின்றன. இவைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 5.4.70 காலை 10.00 மணி வரை திருகோணமலைக கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திர உரிமை 1970ம் ஆண்டு மே முதலாம் தேதியிலிருந்து 8 மாத கால வரையறை உடையதாகும்.

1. கங்கை 2. மூதூர் 3. கிளிவெட்டி 4. உப்பாறு 5. சலப்பையாறு

6. கட்டைப்பறிச்சான் 7. புடவைக்கட்டு 8. யான்ஓயா 9. இடிமாந்துறை.

இவ்விற்பனவுக்கான விண்ணப்பப்படிவங்கள் திருகோணமலைக் கச்சேரியில் 4.4.70ந் திகதி பி. ப. 3 மணி வரை வழங்கப்படும். ரூபா 100/- கட்டிய பற்றுச்சீட்டையும் இவ்விண்ணப்பப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்கத்தயாராக இருத்தல் வேண்டும். காலை பத்து மணிக்கு கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் திறக்கப்பட்டு கவனிக்கப்படும். அந்நேரம் விரும்பினால் விண்ணப்பதாரர்களும் சமூகம் தரலாம். பதிவுத்தபால் மூலம் தம் விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் தங்களின் கேள்விப்பத்திரங்களைக் கச்சேரியில் நேரில் கையளிக்கலாம். அப்படிக்கையளிக்கும் போது விண்ணப்பம் அடங்கியுள்ள தபால் உறையின் மீது எத்துறைக்காக கேள்வி விளம்பரம் கோரப்படுகின்றதோ அதன் பெயரையும் விண்ணப்பதாரரின் பெயர் விலாசம் ஆகியவற்றையும் பூரணமாக அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்த வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திர விண்ணப்பதாரர் கேட்ட தொகையின் மூன்றின் ஒன்றைப்பிணைப் பணமாக செலுத்த வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவித்தல் கிடைத்த மூன்று நாட்களுக்கிடையில் அனுமதிக்கப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தத்தவறினல் அவருடைய விண்ணப்பத்தை இழக்க நேரிடும்.

4. இவ்விற்பனவுக்குரிய நிபந்தனைகளைத் திருமலைக்கச்சேரியில் அலுவலக நாட்களில் காலை 9.00மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை பார்வையிடலாம். (போயாவிற்கு முதல்நாட்களில் காலை 9.00–1.00 மணி வரை)

எவ்விதக்கேள்வியுமின்றி கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமையை திருகோணமலை அரசாங்க அதிபர் பெற்றுள்ளார்.

எஸ். சிவஞானம்,
உதவி அரசாங்க அதிபர்,
திருகோணமலை மாவட்ட அதிபருக்காக.

கச்சேரி,
திருகோணமலை, 24.2.70

3–178—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர். தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு .. | 5.3.70 | வியாழன் .. | 27.2.70 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 13.3.70 | வெள்ளி .. | 5.3.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| | 20.3.70 | வெள்ளி .. | 13.3.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 26.3.70 | வியாழன் .. | 19.3.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| ஏப்பிறல் .. | 3.4.70 | வெள்ளி .. | 25.3.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி .. | 3.4.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி .. | 8.4.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி .. | 17.4.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் .. | 23.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| மே .. | 8.5.70 | வெள்ளி .. | 30.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி .. | 8.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி .. | 15.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி .. | 22.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| யூன் .. | 5.6.70 | வெள்ளி .. | 29.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் .. | 5.6.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் .. | 11.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் .. | 18.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.